**நீலகிரி மாவட்ட வேளாண் வானிலை முன்னறிக்க மடல்**

**வெளியீடு- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகை.**
**& இந்திய வானிலை ஆராய்ச்சி மையம்**

**தேதி 17.11.15**

சமீபகாலத்திற்கான வானிலை அறிக்கை:-

1. சமீப காலத்தில் மாவட்டத்தில் சில இடங்களில் மிதமான மழை பெறப்பட்டது.
2. தட்பவெப்பம் மற்றும் காற்றின் ஈரப்பதம் - அதிகபட்ச வெப்பநிலை 16 ° - 18 ° செ. மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை 8-12° செ. ஆக இருந்தது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 74-94% மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 71-98% இருந்தது. காற்றின் வேகம் 2-6 (கிலோ.மீ./மணிக்கு).

| வானிலை குறிப்புகள் | 18.11.15 | 19.11.15 | 20.11.15 | 21.11.15 | 22.11.15. |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 16 | 18 | 12 | 12 | 3 |
| அதிகபட்ச தட்ப வெப்பம் ($^0$ செ.) | 17 | 17 | 17 | 17 | 17 |
| குறைந்தபட்ச தட்ப வெப்பம் ($^0$ செ.) | 10 | 10 | 10 | 10 | 10 |
| மேகமூட்டம் (ஒக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 94 | 94 | 94 | 92 | 90 |
| குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 92 | 92 | 92 | 90 | 88 |
| காற்றின் வேகம் (கிலோ.மீ./மணிக்கு) | 4 | 4 | 4 | 4 | 4 |
| காற்றின் திசை | 360 | 360 | 360 | 360 | 360 |

**வானிலை சார்ந்த சாகுபடி குறிப்புகள்**

- மாவட்டத்தில் மிதமான மழை ஐந்து நாட்களுக்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- வரும் நாட்களில் பலத்த மழை இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், நிலத்தில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
- தொடர் மழையின் காரணமாக, காய்கறி பயிர்களில் நோய் ஏற்படுவதை தடுக்க, சூடோமோணஸ் 10 மில்லி / ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் பயிர்களின் மீது தெளிக்கவும்.
- கடந்த வாரம் பெய்த தொடர் மழையின் காரணமாக, வெள்ளை பூண்டில், ப்யூசேரியம் அழுகல் நோய் பரவி வருகின்றது. இதனை கட்டுப்படுத்த, கார்பெண்டசிம் 2 கிராம் / லிட்டர் தண்ணீரில் கரைத்து பயிரைச்சுற்றி ஊற்றவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்
உதகை